# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.54/2023

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தனம்மாள் | மதம் | : இந்து |
| க/பெ | : சுப்பிரமணி | ஜாதி | : -- |
| வயது | : 60 | கிராமம் | : பொன்பாடி |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**03.11.2025**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். 12.06.2000ம் தேதியிட்டு ஆண்டாள் வகையறா மகேந்திரனுக்கு கிரையம் கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 27.06.2002ம் தேதியிட்டு ஜெகந்நாதனுக்கு மகேந்திரன் எழுதி கொடுத்த ஈடு காட்டிய அடமானம் கடன் பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன். **(ஈடு காட்டிய அடமான கடன் பத்திரம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 09.12.2004ம் தேதியிட்டு கஜேந்திரனுக்கு மகேந்திரன் எழுதி கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 02.1.2012ம் தேதியிட்டு சுப்பிரமணி அவர்களுக்கு கஜேந்திரன் எழுதி கொடுத்த கிரைய ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என் கணவர் சுப்பிரமணி எனக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன்.

**(செட்டில்மெண்ட் பத்திரம் வா.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பட்டா எண்.6585 என் கணவர் பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. பட்டா எண்.6967 என் பெயரில் உள்ள பட்டா இணையவழி நகல் தாக்கல் செய்கிறேன். **(பட்டா வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சொத்திற்கான 01.01.2011 முதல் 31.12.2011 வரையிலான வில்லங்க சான்று தாக்கல் செய்கிறேன். **(வில்லங்க சான்று வா.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 05.12.1982ம் தேதியிட்டு ஏகாம்பர ரெட்டி ஆண்டாள் வகையறாவிற்கு எழுதி வைத்த உயில் ஆவணம் சார்பதிவாளர் நகல் தாக்கல் செய்கிறேன். **(உயில் வா.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)